# கோலாலம்பூருக்கு யுனெஸ்கோவின் புத்தாக்க நகர அந்தஸ்து பெற மாநகர மன்றம் விண்ணப்பம்

கோலாலம்பூர், ஏப். 26-

யுனெஸ்கோவின் புத்தாக்க நகரங்களின் வரிசையில் கோலாலம்பூரையும் இடம் பெறச் செய்ய அதன் மாநகர மன்றம் விண்ணப்பத்தை சமர்ப்பித்து இருப்பதாக கோலாலம்பூர் மேயர் மைனுனா ஷாரிப் கூறினார்.

கோலாலம்பூர் புத்தாக்கத்திற்கான ஒரு வட்டார மையமாக இருப்பதால் அதை அதில் இடம் பெறச் செய்ய மாநகர மன்றம் விண்ணப்பம் செய்துள்ளது.

பாரிசிலிருந்து 2 தினங்களுக்கு முன்னர் இது தொடர்பான உறுதிஎ கடிதமும் வந்துள்ளது.அனைத்து பரிந்துரைகளும் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளன என்றார் அவர்.இதற்கு அடுத்து இந்த விண்ணப்பம் மேல் பரிசீலனைக்கு கொண்டு செல்லப்படும். உலகளாவிய புத்தாக்க நகரங்களில் மலேசியாவும் பிறகு பரிசீலிக்கப்படும் என்றார் அவர்.



நேற்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் வாரிசான் கேஎல் என்ற கோலாலம்பூரை மேம்படுத்தும் திட்டம் ஒன்றின் அறிமுக விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார். கோலாலம்பூரின் கலாச்சாரத்தை பாதுகாப்பது, அதன் வரலாற்று சிறப்பை பாதுகாப்பது, பல்வேறு சமுதாயங்களின் பண்புக் கூறுகளை வலுப்படுத்த மொத்தம் 100 கோடி வெள்ளி ஒதுக்கப்படுவதாக அன்வார் அறிவித்தார்.

இதற்கு முன்பு ஜார்ஜ்டவுன் ஆகிய நகரங்களுக்கு வழங்கப்பட்ட யுனெஸ்கோ பாரம்பரிய அந்தஸ்துக்கும் இதற்கு நிறைய பாகுபாடு உண்டு என்றார் மைனுனா. குறிப்பாக கோலாலம்பூரின் நகரத் துடிப்பு, அதன் புத்தாக்க வடிவம் கலை, இசை, இலக்கவியல் புத்தாலக்கம் இப்படி பல்வேறு கோணங்களில் கோலாலம்பூருக்கு இந்த சிறப்பு ஏற்படுத்தப்படும் என்றார் அவர்.